பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

28 05 2024 7 15

செவ்வாய்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மக்களவைத் தேர்தலில் ஏழாவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரம் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது,
- மிஸோராமில் இன்று காலை ஏற்பட்ட நிலச்சரிவில் 12 பேர் உயிரிழந்தனர்.
- நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள பப்புவா —நியூகினியாவுக்கு இந்தியா ஒரு மில்லியன் அமெரிக்க டாலரை உடனடி நிவாரணமாக வழங்குவதாக அறிவித்துள்ளது.
- இந்தியாவும் - லிபியாவும் இருதரப்பு உறவுகள் மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.
- தென்கொரியாவின் சாங்வோனில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீவல்லி ராஷ்மிகா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் ஏழாவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரம் நாளைமறுநாள் முடிவடையவுள்ள நிலையில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேற்குவங்க மாநிலம் பாராசத் **Earasat** என்ற இடத்தில் தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி, கடந்த பத்து ஆண்டுகால தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் ஊழலை எவ்விதத்திலும் அனுமதிப்பதில்லை என்ற உறுதிப்பாட்டுடன் தாங்கள் செயல்பட்டு வந்ததாகக் கூறினார்.

காங்கிரஸ் மற்றும் ஐ என் டி ஐ கூட்டணியைச் சேர்ந்தவர்கள் சாமானிய மக்களின் பிரச்சினைகளை கவனிக்கவில்லை என்றும், தங்களைப் பற்றியும், தங்கள் குடும்ப நலனைப் பற்றியுமே சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்குவங்கத்தில் மட்டுவா சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு குடியுரிமை சட்டத்தின் கீழ், குடியுரிமை அங்கீகாரம் வழங்கப்பட்டதாகக் கூறினார்.

பெண்களுக்கான அதிகாரம் மற்றும் அவர்களின் உரிமைகள் நிலைநாட்டப்பட்டதாகவும் திரு நரேந்திரமோடி குறிப்பிட்டார்..

**[]<<<>>>[]**

விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் உதவும் வகையில் பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான பிஜேபி அரசு செயல்படவில்லை என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி குற்றம்சாட்டியுள்ளார்,

உத்திரபிரதேச மாநிலம் Deoria-வில் தேர்தல் பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், பெரும் செல்வந்தர்களுக்கு உதவுவதற்காகவே அந்த அரசு செயல்பட்டதாகத் தெரிவித்தார்.

காங்கிரஸ் மற்றும் ஐ என் டி ஐ கூட்டணி இடஒதுக்கீட்டுக்கான 50 சதவீத உச்சவரம்பை நீக்குவதற்கு பாடுபடும் என்று அவர் கூறினார்.

அரசியல் சாசன ரீதியாக இதனை உறுதி செய்தற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

அரசியல் சாசனத்தை முற்றிலுமாக அகற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளையும் எதிர்த்து போராட தங்கள் கூட்டணி தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

அக்னிவீர் திட்டம் இளைஞர்களுக்கு சாதகமாக இல்லை என்றும், எனவே அதனை நீக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு ராகுல்காந்தி கூறினார்.

**[]<<<>>>[]**

பீகார் மாநிலத்தில் அரசியல் தலைவர்கள் ஏழாம் கட்ட மக்களவைத் தேர்தலுக்கான தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஐக்கிய ஜனதாதள் தலைவரும், பீகார் முதலமைச்சருமான திரு நிதிஷ்குமார், நாலந்தா மக்களவைத் தொகுதியில் மேற்கொண்ட பிரச்சாரத்தின்போது ஆர் ஜே டி மற்றும் அக்கட்சியின் தலைவர் திரு லாலுபிரசாத் ஆகியோர் வாரிசு அரசியலை நம்பியிருப்பதாகக் கூறினார்.

இதனிடையே பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய திரு லாலுபிரசாத், இடஒதுக்கீட்டையும், அரசியல் சாசனத்தையும் பாதுகாப்பதுதான் இந்த மக்களவைத் தேர்தலில் முக்கிய போராட்டமாக உள்ளது என்று தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் தமக்கு வழங்கப்பட்ட இடைக்கால ஜாமீனை மேலும் ஏழு நாட்களுக்கு நீட்டிக்கக்கோரி தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்ற விடுமுறைக்கால அமர்வு விசாரிக்க மறுத்துவிட்டது.

திரு கெஜ்ரிவால் சார்பில் ஆஜரான வழக்கறிஞரிடம் இந்த மனுவை பட்டியலிடுவது தொடர்பாக தலைமை நீதிபதியை அணுகுமாறு நீதிபதிகள் திருமதி மகேஸ்வரி, திரு விஸ்வநாதன் ஆகியோர் கொண்ட விடுமுறைகால பெஞ்ச் அறிவுறுத்தியது.

**[]<<<>>>[]**

இந்தியாவும் - லிபியாவும் இருதரப்பு உறவுகள் மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

புதுதில்லி வந்துள்ள லிபியாவின் வெளியுறவுத்துறை துணை அமைச்சர் திரு முகமது கலில் இஸ்ஸா-வை, வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திரு முரளிதரன் சந்தித்து பேசினார்.

இரு நாடுகளும் இணைந்து செயல்படுத்துவதற்கான திட்டங்கள், முதலீடுகள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விஷயங்கள் குறித்து இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டது.

**[]<<<>>>[]**

கடுமையான நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள பப்புவா —நியூகினியாவுக்கு இந்தியா ஒரு மில்லியன் அமெரிக்க டாலரை உடனடி நிவாரணமாக வழங்குவதாக அறிவித்துள்ளது.

இப்பகுதியில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான பணிகளுக்கும், மறு கட்டுமான பணிகளுக்கும் இந்த நிதி உதவியை இந்தியா வழங்குகிறது.

பப்புவா நியூகினியாவில் உள்ள எங்கா கமாகாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நேரிட்ட நிலச்சரிவினால் நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

**[]<<<>>>[]**

மிஸோராமில் இன்று காலை நேரிட்ட நிலச்சரிவில் 12 பேர் உயிரிழந்தனர்.

**Aizawl** என்ற இடத்திலிருந்து நான்கு கிலோமீட்டர் தூரத்தில் உள்ள **Hlimen** என்ற பகுதியில் இந்த நிலச்சரிவு ஏற்பட்டது.

ஆப்பகுதியில் மீட்புப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிள்றன.

ரிமால் புயல் கரையை கடந்ததை அடுத்து அப்பகுதியில் தொடர்ந்து கனமழையும், சூறைக்காற்றும் வீசி வந்தது.

மிஸோம் மாநிலத்தின் பல பகுதிகள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளதாக அங்குள்ள எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஐஸ்வால் நகரில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதால் பெரும்பாலான கடைகள் மூடப்பட்டுள்ளதாகவும், மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்படுவதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

**[]<<<>>>[]**

தென்மேற்கு பருவமழை கேரளாவில் அடுத்த அடுத்த மூன்று நான்கு நாட்களில் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாக சென்னை வானிலை ஆய்வு மையத்தின் இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், தமிழகம் மற்றும் புதுவையில் அடுத்த மூன்று நாட்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும் கூறினார்.

வங்கக்கடல் மற்றும் தெற்கு கேரள கடலோரப் பகுதிகளில் அடுத்த நான்கு நாட்களுக்கு சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளில் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும் திரு செந்தாமரைக் கண்ணன் அறிவுறுத்தினார்.

**[]<<<>>>[]**

இதனிடையே கேரளாவின் தென்மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது.

கோட்டயம், எர்ணாகுளம மாவட்டங்களில் சிவப்புநிற அபாய எச்சரிக்கையும், மற்ற மாவட்டங்களில் ஆரஞ்ச் நிற மழை எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளன.

ஆலப்புழா, கோட்டயம், எர்ணாகுளம், இடுக்கி மற்றும் பத்தனம்திட்டா மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தாழ்வான பகுதிகளில் நீர் சூழ்ந்துள்ளதால் மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

மலைப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்புடன் இருப்பதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட மாவட்ட நிர்வாகங்கள் மேற்கொண்டுள்ளன.

பல இடங்களுக்கு சுற்றுலா பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது,

கேரளாவில் உள்ள அணைகளின் நீர் இருப்பு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

[]<<<>>>[]

ரிமால் புயலால் பங்களாதேஷின் கடலோரப் பகுதிகளில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த புயலில் சிக்கி 13 பேர் உயிரிழந்தனர். பெரும்பாலானோர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.

ரிமால் அதி தீவிரப் புயலால் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

குல்னா, **Varisal, Chattogral** பகுதிகளில ஒரு லட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

37 லட்சத்திற்கும் கூடுதலான மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

இதனிடையே பங்களாதேஷ் வானிலை ஆய்வு மையம் இன்று வெளியிட்டுள்ள சிறப்பு வானிலை அறிக்கையில், சைலட் மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் நிலவிய நில காற்றழுத்த தாழ்வுப்பகுதி வலுவிழந்துள்ளதாகவும், இதனால் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் கூறியுள்ளது.

[]<<<>>>[]

வடகொரியாவின் அச்சுறுத்தல்களுக்கு பதிலளிக்கும்விதமாக தென்கொரியா மற்றும் அமெரிக்க ராணுவமும் இணைந்து விமான போர் பயிற்சியை மேற்கொண்டுள்ளன.

அமெரிக்காவின் 90 சிறிய ரக விமானங்களும், தென்கொரியாவின் எப்-35-ஏ **Stealth** ரக விமானங்களும் நேற்று முதல் தங்களது நான்கு நாடகள் பயிற்சியை தென்கொரியாவின் மேற்கு கடற்கரைப் பகுதியில் தொடங்கியுள்ளன.

வடகொரியாவில் எந்த ஒரு தாக்குதல் நடவடிக்கையையும் எதிர்கொள்வதற்கு தயாராக இருக்கும் நோக்கில் இந்த பயிற்சி மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தென்கொரியாவின் சாங்வோனில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீவல்லி ராஷ்மிகா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 7-6, 6-2 என்ற செட் கணக்கில் தைவான் வீராங்கனையை வென்றார்.

**[]<<<>>>[]**

சிங்கப்பூர் ஓப்பன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது,

இப்போட்டியில் இந்தியாவின் முன்னணி வீரர்களான லக்‌ஷய சென், ஸ்ரீகாந்த், பிவி சிந்து உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இன்று நடைபெற்ற முதல் சுற்று ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் இந்தியாவின் பிரியன்ஷூ ரெஜாவத், அகர்ஷி காஸியப் ஆகியார் தோல்வியடைந்தனர்.

இரட்டையர் பிரிவில் ரெங்கிரெட்டி - ஷிராக்ஷெட்டி இணை, ருதபர்ன பாண்டா- ஸ்வேதா பர்னா பாண்டா இணை மற்றும் ஆசித் சூரியா – அம்ருதா பிரமுதேஷ் இணை தோல்வியடைந்தது.

பாரிஸில் நடைபெற்று வரும் பிரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இன்று நடைபெறும் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா - ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை, ஃபின்லாந்தின் **Emil Ruusuvuori** மற்றும் ஹங்கேரியின் **Marton** இணையை எதிர்கொள்கிறது.

மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் யூகி பாம்ரி – பிரான்ஸின் **Albano Olivetti** இணை – ரஷ்யாவின் **Roman Safiullin –** ஆஸ்திரேலியாவின் **John Peers** இணையை எதிர்கொள்கிறது.

***<u>End of News</u>***